Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 5 சனிக்கிழமை (21.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 234

கறுப்புத் துணியால் முகத்தை மறைத்துக்கொண்டு போலித்துப்பாக்கிகளைக் காட்டி

## குடாநாட்டில் பல இடங்களில் கொள்ளையில் ஈடுபட்ட நால்வர் அளவெட்டியில் பொலிஸாரிடம் சிக்கினர்!

### இவர்களுடன் இணைந்து இயங்கிய பலர் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 21

குடாநாட்டின் பல இடங்களிலும் நடைபெற்ற கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என நம்பப்படும் நான்கு சூத்திரதாரிகள் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நால்வரும் மல்லாகம் நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமக்குக்கிடைத்ததகவல் ஒன்றில் பேரில் தெல்லிப்பழை பொலிஸார் அளவெட்டி, தெல்லிப்பழைப் பகுதிகளில் நடத்திய தேடுதலில் சம்பந்தப்பட்ட நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

கறுப்புத் துணியால் முகங்களை மறைத்துக்கொண்டு, போலித்துப்பாக்கிகளைக் காட்டி, பல பகுதிகளிலும் தாம் கொள்ளைகளில் ஈடுபட்டதாக நால்வரும் விசாரணைகளில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தாம் கொள்ளையிட்ட நகைகளின் பெறுமதி மட்டும் பல கோடி ரூபா என்றும் அவர்கள் விசாரணையில் தெரிவித்திருக்கின்றனர்.

இவர்கள் நால்வரும் 24 வயதுக்கு உட்பட்டவர்கள். இந்த நால்வருடனும் இணைந்து இயங்கி வெவ்வேறு இடங்களில் கொள்ளை

(08ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் 12 தமிழர்கள் கைது

கொழும்பு, ஜூலை 21

கட்டுநாயக்க விமானநிலையப் பகுதிக்குள் வைத்து 12 தமிழர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையப் பகுதிக்குள் அனுமதியின்றி உள் நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அதிகாலை சுமார் 3 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் பயங்கரவாதத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர்.

எகெலியகொட, கஹவத்த மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(சி)

# மன்னாரில் படைமுகாம் மீது தாக்குதல் முறியடித்ததாக அரசு தரப்புத் தெரிவிப்பு

## சேதங்கள் குறித்து முரண்பட்ட தகவல்கள்

கொழும்பு, ஜூலை 21

**மன்னார் மாவட்டம், நீலச்சேனையில் உள்ள இராணுவ மினி முகாமை தாங்கள் அழித்தனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

**ஆனால், விடுதலைப் புலிகளின் தாக்குதலைத் தாம் முறியடித்ததாகவும், அவர்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியதாகவும் இராணுவம் தெரிவித்தது.**

நேற்றைய தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் இரண்டு தரப்புகளும் முரணான தகவல்களை வெளியிட்டதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

மன்னாரில் அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கும் இடையிலான போக்குவரத்து நடைபெறும் உயிலங்குளம் சோதனைத் தடை முகாமை அண்டியிருந்த நீலச்சேனை மினிமுகாம் மீதே நேற்று அதிகாலை 2.35 மணியளவில் புலிகள் அதிரடிப் பாய்ச்சல் நடத்தியிருக்கின்றனர்.

அங்கு நடந்த சமரில் பத்துப் படையினரைக்கொன்று, மினிமுகாமிலிருந்த அனைத்து ஆயுதங்களையும் தாங்கள் கைப்பற்றினர் எனப் புலிகள் தெரிவித்தனர். இச்சமரில் தமது

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-அமெரிக்க ஒப்பந்தம் சபையில் நேற்றுச் சமர்ப்பிப்பு

இலங்கை - அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் நீண்ட இழுபறியின் பின் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறப்பட்டமை போல பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றுக்கு வந்து அந்த ஒப்பந்தத்தை சபாபீடத்தில் ஒப்படைத்தார்.

ஆனால், அந்த ஒப்பந்தத்தில் இருந்த சில நபர்களின் பெயர்களும், தொலைபேசி இலக்கங்களும் நீக்கப்பட்டே அது சமர்ப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளம் பாதை நேற்று மூடப்பட்டது

கொழும்பு, ஜூலை 21

மன்னார், உயிலங்குளத்திலுள்ள சோதனைச் சாவடியூடான விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான போக்குவரத்து நேற்றுமுதல் தற்காலிக மாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மன்... கட்டையடம்பன் பகுதியிலுள்ள படையினரின் முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதை யடுத்தே இந்தப் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட போக்குவரத்து பாதையை மூடியதற்க... உத்தியோகபூர்வ அறிவித்தலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் நேற்று இரண்டு தடவைகள் பூமியதிர்வு

கொழும்பு,ஜூலை 21

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள பெரலிய வெஹல, லுணுகம்வெகர ஆகிய இரண்டு கிராமங்களில் நேற்று அதிகாலை 5 மணிக்கும் காலை 7 மணிக்கும் இடையில் சிறு அளவிலான பூமியதிர்வுகள் ஏற்பட்டதாக இலங்கைத் தேசிய புவியியல் பணியகம் தெரிவித்தது.

இந்தப் பூமியதிர்வுகளினால் இரண்டு வீடுகள் சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

மேற்படி இரண்டு

(08ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளாடி ஷெல் தாக்குதலில் தாயும் சேயும் காயம்

கொழும்பு,ஜூலை 21

மன்னார், தள்ளாடிப் பகுதியிலுள்ள இராணுவ முகாமிலிருந்து , மன்னார் பிரதேச விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது நேற்று அதிகாலை 5.30 மணி முதல் படையினர் ஆட்லறி மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

இந்தத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், அவரது சிறுவயதுக் குழந்தையும் படுகாயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கழுத்துப் பகுதியில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் ஒப்பந்தம் செய்து குற்றமிழைத்தது இலங்கை!

### மனம் புழுங்குகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 21


பயங்கரவாதத்திற்கு சட்டரீதியான பிரதேசம் ஒன்றைத் தாரைவார்த்து, உடன்படிக்கையொன்றைச் செய்ததன் மூலம் குற்றமிழைத்துள்ளது இலங்கை. அத்தகைய குற்றத்தை இழைத்த ஒரே நாடு இலங்கையைத் தவிர வேறெங்கும் இருக்க முடியாது.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

நாளை மஹரகம, தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 17ஆவது

(08ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்தமிழர்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் - இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகரான - எம்.கே.நாராயணனைப் பதவியிலிருந்து விலக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி சென்னையில் நேற்று ஈழத்தமிழர் ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை வகித்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. ஈழத்தமிழர் சார்புப் பிரமுகர் சு.ப. வீரபாண்டியனும் காணப்படுகின்றார்.



## அரசு எங்களைப் புறந்தள்ளி நடந்தால் புலிகளை அழித்து ஒடுக்க முடியாது

### தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருப்போம் என்கிறார் கருணா

கொழும்பு, ஜூலை 21

கிழக்கு மாகாணத்தில் எமக்கு மக்கள் ஆதரவு பரந்தளவில் இருக்கிறது. எங்களிடம் ஆலோசனை பெறாமல் கிழக்கு மாகாணத்தில் ஏதாவது திட்டங்களை அரசு மேற்கொள்ளுமாக இருந்தால். விடுதலைப்புலிகளை முற்றாக அழிப்பதில் அரசு பின்னடைவையே சந்திக்கும்.

- இவ்வாறு தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா தெரிவிக்கின்றார்.

நேற்று பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்தில் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் எங்களுடைய அரசியல் அலுவலகங்களைத் திறந்துள்ளோம். இதனூடாக மக்களுக்கு ஓர் அரசியல் தெளிவை ஏற்படுத்தி வருகின்றோம். எதிர்காலத்தில் இங்கு தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. தேர்தலில் மக்களின் பங்களிப்பு எவ்வாறிருக்க வேண்டும், இது போன்ற நேரத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து மக்களுக்கு விளக்கமளித்து வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தப்பட்டுவிட்டன என்று கூறமுடியாது. அங்கு புலிகளின் புலனாய்வுத் துறையினர் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் பிரதம செயலர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது போன்ற அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் எங்கள் ஆயுதங்களைக் களைவது ஆபத்தான விடயமாகும்.

நாங்கள் ஒரு தீர்மானத்தை வைத்துள்ளோம். விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து எப்போது ஆயுதங்கள் முழுமையாகக் களையப்படுகின்றனவோ, அப்போது எங்களுடைய ஆயுதங்களுக்கும் ஓய்வு

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்பிகலவுக்குப் பதிலடியை மிகவிரைவில் எதிர்பாருங்கள்!

## சபையில் சிறிகாந்தா எம்.பி. எச்சரிக்கை



''ஆரம்பத் தாக்குதலின்போது தந்தி ரோபாயமாகப் பின்வாங்கிய விடுதலைப் புலிகள் தக்க தருணத்தில் ஆனையிறவு, முல்லைத்தீவு ஆகிய இரு பெரிய இராணுவ முகாம்களையும் கைப்பற்றியமையை இந்த அரசு மறந்துவிடக் கூடாது. கிழக்கு மாகாணத்தில் கிடைத்த சிறு வெற்றியை பெரு விழாவாகக் கொண்டாடி இறுமாப்படைய வேண்டாம்.. கூடிய விரைவில் அதற்கான பதிலடி கிடைக்கத்தான் போகின்றது''.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தா நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

ஜே.வி.பியினால் முன்வைக்கப்பட்ட முப்படையினருக்கும் நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

கிழக்கில் நடை பெற்றது ஒரு யுத்தமே அல்ல. அது ஒரு சமர் மட்டுமே. புலிகள் பின் வாங்கிவிட்டனர் என்று இறுமாப்படைய வேண்டாம். யுத்தம் இன்றும் தொடர்கிறது.

வடக்கில் அன்று பின்வாங்கிய புலிகள் பின்னர்ஆனையிறவையும், முல்லைத் தீவையும் கைப்பற்றினர் . அதை இன்றும் கூட உங்களால் மீட்க முடியவில்லை.

தொப்பிகலப் பிரதேசத்தைக் கைப்பற்றி விட்டோம் எனத் தம்பட்டம் அடிக் கின்றனர். மட்டக் களப்பில் உள்ளூ ராட்சித் தேர் தலை நடத்தப் போகிறார்கள் எனக் கூறுகின் றனர். அது நடக்க முடியாத ஒரு விடயம்.

கிழக்கு மாகாணத்தில் தனி யான மாகாண சபைக்கான தேர்தலை நடத்தப்போகிறார் கள் எனவும் அங்கே முதலமைச்சராகலாம் என வும் ஓர் அமைச்சர் பகல் கனவு காண்கின்றார்.

இறைமை உள்ள இரண்டு நாடுகளுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. வடக்கும் கிழக்கும் ஒன்றிணைக்கப்பட்டன.

இதனைப் பிரிப்பதானால் அங்கே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் தீர்ப்பைப் பெற வேண்டும். இந்தப் பதவி மோகம் கொண்ட அமைச்சர் நினைப்பது போல் கிழக்கு மாகாண சபைக்கு தனியாகத் தேர்தல் நடத்த முடியாது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்தப் போவதாக அரசு கூறுகின்றது. அங்கே ஆயுதம் ஏந்திய துணைப்படைகள் அரசின் கைக்கூலி களாக நடமாடுகின்றன. துப்பாக்கி முனை யில் நடைபெறும் தேர்தல் நியாயமான முடி வுகளைத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது.

உங்களுடைய ஆர்ப்பாட்டம், விழாக்கள் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளையும், போராட்டத்தையும் அழித்துவிட முடியாது - என்று சிறிகாந்தா கூறினார். (சி)

# கடைசித் தமிழன் இருக்கும் வரை யுத்தம் தொடரும் என்று கஜேந்திரன் சூளுரை!

## கௌரவமான வாழ்வு; இன்றேல் கௌரவமான சாவு என்கிறார்



''தமிழன் ஒரு போதும் சிங்கள வர்களுக்கு அடி பணிய மாட்டான். கடைசியாக ஒரு தமிழன் இருக் கும்வரை இந்த யுத்தம் நடந்து கொண்டேதான் இருக்கும். நாங் கள் கௌரவமாக வாழவேண்டும். இல்லா விட்டால் கௌரவமாகவே செத்துவிடு வோம்.''

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் இடம் பெற்ற - தொப்பிகல கைப்பற்றப்பட்டமை தொடர்பான - சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற் றிய சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் சூளுரைத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவையாவது:-

சிங்களப் படையினர் கிழக்கைப் பிடித்து அங்கு தமிழ் மக்களை அடிமைப்படுத்தி வைத் துள்ளனர். தங்களின் சொந்த இடங்களில் நிம் மதியாக வாழ்ந்த மக்கள் இப்போது அகதி முகாம்களில் அல்லல்படுகின்றனர்.

சொந்தமாகத் தொழில்செய்து வாழ்ந்து வந்த இம்மக்களுக்கு சிங்களவர்கள் இன்று பிச்சை கொடுக்கின்றனர். சொந்த இடங் களை இழந்து, கல்வியை இழந்து, இம் மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

தொப்பிகலவைக் கைப்பற்றி இந்த அரசு விழாக் கொண்டாடுகிறது. இந்த அரசு வேறு நாட்டைப் பிடித்திருக்கிறதா? அல்லது நாட் டின் ஒரு பகுதியைப் பிடித்திருக்கிறதா?

இவ்வாறான விழாக்கள் மூலம் அரசு எவ்வளவு கஷ்டப்பட்டு தொப்பிகலவைப் பிடித்திருக்கிறது என்பதையும், தமிழன் எவ் வளவு வீரமுள்ளவன் என்பதையும் சர்வதேச நாடுகள் விளங்கியுள்ளன.

இந்த யுத்தம்மூலம் புலிகளைப் பலவீனப் படுத்தி அவர்களைப் பேச்சுக்கு அழைக்க லாம் என்று அரசு கனவு காணுகின்றது. அது ஒருபோதும் நடக்காது.

புலிகள்தான் தமிழர்களின் ஏக பிரதிநிதி கள். இந்த ஆணையை முன்வைத்துத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டி யிட்டு வென்றது. 95 வீதமான தமிழர்கள் வடக்கு -கிழக்கில் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தொடர்ந்தும் தமிழர்களை அடிமைப் படுத்த முடியாது. ஒரு தமிழன் எஞ்சியிருக் கும் வரை இந்த யுத்தம் தொடரும். கௌர வமாக நாம் வாழவேண்டும். இல்லையேல் கௌரவமாகவே சாகவேண்டும். - என்றார்.



நாடாளுமன்றத்திலிருந்து...

# புலிகளைப் பிளவு படுத்திய பெருமை ரணிலுக்கே உண்டு!

## நாடாளுமன்றில் ஐ.தே.கட்சி எம்.பி. பெருமிதம்



''பிரபாகரனின் புகைப் படத்தை கிழக்கில் பெண் கள் செருப்பால் அடிக்கும் நிலை உருவான தற்கு ரணில் விக்கிரமசிங்கவே காரணம். அவர் புலிகள் மத்தியில் ஏற்படுத்திய பிளவின் காரணமாகவே இது நடந்தது. இந்தக் கௌர வம் ரணிலுக்கே உரியது.''

- இவ்வாறு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ண நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற - தொப்பிகல கைப்பற்றியமை தொடர் பான - சபை ஒத்தி வைப்புவேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற் றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியவையாவது:- அரசின் நிலைப்பாடு தொடர்பாக நாம் மிகவும் வெட்கப் படுகின்றோம். தொப்பிகல கைப்பற்றப்பட் டமை இப்போதுதான் முதல் தடவையல்ல.

எமது படைவீரர்களுக்கு தொப்பிகல வைப் பிடிப்பது பெரிய விடயமல்ல. நல்ல தலைமைத்துவம் கிடைத்தால் தொப்பிகல மட்டுமல்லாமல் அதனைத் தாண்டியும் பல இடங்களையும் அவர்கள் கைப்பற்றுவர்.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த வெற்றி தொடர் பாகப் படையினரை அவமானப்படுத் தினார் என்று அரசு குற்றஞ்சாட்டுகின் றது. அவர் ஒரு போதும் அப்படிச் செய்யவில்லை.

அரசு பலவீனத் துடன் செயற்படுகிறது. இந் தப் பலவீனத்தில் ஜே.வி.பிக்கும், பங் குண்டு. இந்த அரசைஉரு வாக்கியதே ஜே.வி.பி. தான்.

### ஜே.வி.பி. பதில் சொல்லியாக வேண்டும்

இந்தப் பொறுப் பில் இருந்து ஒரு போதும் ஜே.வி.பி. தப்பமுடியாது. அர சின் செயற்பாடுகள் அத்தனைக்கும் ஜே.வி.பி. பதில் சொல் லியேயாகவேண்டும்.

1994இல் சந்திரிகா நாட்டைப் பொறுப் பேற்ற சமயம் கிழக்கு அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதன்பிறகுதான் அரசிடமிருந்து கிழக்கு நழுவியது.

ஐ.தே.கட்சி கிழக்கை முற்றாக மீட்ட போதும் விழா எதனையும் நடத்தவில்லை. இந்த அரசு புதிதாகக் கிழக்கைப் பிடித்தது போல் காட்டுகிறது.

எமது படையினர், யுத்தத்தில் உயிரிழக் கின்றார்கள் என்றால் அது ஜனாதிபதி வழங் கிய பணத்தில் புலிகள் வாங்கிய துப்பாக்கி ரவைகள் மூலம்தான்.

புலிகளிடமிருந்து கருணா அணியினர் பிரிந்ததைத் தொடர்ந்து கிழக்கில் பிரபாகர னின் புகைப்படத்திற்குப் பெண்கள் செருப் பால் அடித்தார்கள் என்று விமல் வீரவன்ஸ கூறினார். அதற்குக் காரணம் யார்? ரணில் விக்கிரமசிங்கதானே. அந்தக் கௌரவம் ரணிலுக்குத்தானே கிடைக்க வேண்டும்.

புலிகளை சர்வதேச வலைப்பின்னலில் சிக்கவைத்தவர் ரணில், அவரால் மாத்திரமே இந்த தேசியப் பிரச்சினையைப் புத்திசாலித் தனமாகத் தீர்க்கமுடியும் - என்றார். (சி)


### விற்பனைக்கு

தொலைபேசி இணைப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777 065366
பிற்பகல் 3-5
(62813)

### வீடு விற்பனைக்கு

பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கில் 4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. ரூபா 700,0000/= (எழுபது இலட்சம்). தொடர்பு:S. சிறி, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு. (கல்வாரி சேர் அருகில்) T.P.:0777111400. (62809)


## மரண அறிவித்தல்கள்

### சிவசுப்பிரமணியக் குருக்கள் தினேஷ் சர்மா

(புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயப் பிரதமகுரு)

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியக் குருக்கள் தினேஷ்சர்மா நேற்று (20.07.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியக் குருக்கள் - புஸ்பாவதி தம்பதி யரின் கனிஷ்ட புத்திரனும் ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் - யோகாம்பாள் தம்பதியரின் மருமகனும் ஹர்சினியின் அன்புக் கணவரும் தனஞ்சயனின் அன்புத் தந்தையும் அருணோதயக் குருக்களின் மைத்துனரும் சிவகுமாரக்குருக்கள், சிவகாமசுந்தரி, ரஞ்சனி, சுரேஸ்வரக் குருக்கள், ரமேஸ் சர்மா ஆகியோரின் சகோ தரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

138, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
சிவகுமாரக் குருக்கள்.
(சகோதரர்).

### செ.சண்முகதாசன்

(உரிமையாளர், அல்டி எலக்ரோனிக்ஸ்)



யாழ்ப்பாணம், அத்தியடியை வசிப்பிட மாகக் கொண்ட செ.சண்முகதாசன் (பேபி- உரி மையாளர், அல்டி எலக்ரோனிக்ஸ்) நேற்று (20.07.2007) வெள்ளிக்கிழமை அகால மரண மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11, அத்தியடிபுதுவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### தவறிவிட்டது

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் முத்துசாமி ஜெகதீசனுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. (560441649V) தயவு செய்து கண்டெடுத்தவர்கள், டாட் என்ரப்பிறைஸ் 11,12 நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே: 222 3098, 222 7622

### காணவில்லை

யாழ்.பெரியகடை வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த Honda 100 கடும் நீல நிறமுடைய மோட்டார் சைக்கிளைக் (NPGO 6329) காணவில்லை. தயவு செய்து தகவல் தெரிந்தவர்கள் 41, பெரிய கடை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அல்லது 021 222 2063 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவுக்குமாறு வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சேவல், விறாத்துக் குஞ்சுகள் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61.இராமநாதன்வீதி,கலட்டி, யாழ்ப்பாணம்.
கிளை: மல்ரி பாம், சுவாமியார் வீதி, பாசையூர் அந்தோனியார் கோயில் முன்பாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(62816)

### சிட்டை எழுதுநர் தேவை

G.C.E.சாதாரண தரத்தில் சித்தியடைந்த, கணக்கியல் அறிவுள்ள, சிறந்த கையெழுத்துடைய சிட்டை எழுதுநர் தேவை. முன் அனுபவம் விரும் பத்தக்கது. தகுதியுடையோர் நேரில் வரவும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


### 31ஆம் நாள் நினைவுகளில்...



அமரர் மாணிக்கம் கிருஸ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்)

மலர்வு 10-02-1934 உதிர்வு 21-06-2007

அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து
பண்புடன் வாழ்ந்த எங்கள் அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் - உங்கள்
நினைவுகள் என்றும் நிழலாடும்.

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(62797)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

நல்லூர்,ஜூலை21

அனலைதீவு அரிஹரபுத்திர ஐயனார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. உற்சவம் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவத்தை முன்னிட்டு மெலிஞ்சிமுனை கண்ணகி அம்மன் துறைமுகத்தில் இருந்து காலை 9.30 மணிக்கும் அனலைதீவு துறைமுகத்திலிருந்து மெலிஞ்சிமுனை இறங்குதுறைக்கு பி.ப. 1.30 மணிக்கும் விசேட படகுச் சேவைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (1-111)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி தேவஸ்தானத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை முற்பகல் 10 மணிக்கு 'நற்சிந்தனை' என்னும் தலைப்பில் 'இயல் இசை வாருதி' ப.ஞானேந்திரனின் செரற்பொழிவு இடம்பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை அன்னசத்திர சிவன் கோயிலில் இடம்பெறும்.

அன்றைய தினம் நல்லூர் சட்டநாதர் ஆலயத்திலும் சுந்தரமூரத்தி நாயனார் குருபூசை இடம்பெறவுள்ளது. (1)

* * *

சுழிபுரம்,ஜூலை21

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பகல் 10.30 மணி முதல் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறவுள்ளது. புராணம், சுந்தரர் தேவாரம் ஓதுதல், பூசை வழிபாடுகள் என்பன நடைபெறும். (1-28)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

வல்வெட்டித்துறை, பொலிகண்டி குழந்தை யேசு தேவாலய வருடாந்த திருவிழாவில் இன்று மாலை 4.30 மணிக்கு திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனை, பவனி ஆகியன இடம்பெறும்.

நாளை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி, சொரூப ஆசீர் ஆகியன நடைபெறும். (1)

# தென்மராட்சியில் மழையை அடுத்து காலபோக நெற்செய்கைக்கு ஆயத்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

தென்மராட்சிப் பிரதேத்தில் கடந்த இரு தினங்களாக மழை பெய்ததையடுத்து காலபோக நெற்செய்கைக்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

நெல் வயல்கள் உழுதல் மற்றும் இயற்கை பசளையிடல், வரம்பு கட்டுதல் போன்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆடிப் பிறப்பு தினத்தன்று கடந்த 17 ஆம் திகதி பிரதேசத்தில் மழை பெய்ததால் இம்முறை நெல்விளைச்சல் அமோகமாக இருக்குமென விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

அடுத்த மாதமளவில் நெல் விதைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதால் அதற்கு முன்னர் உரவகைகளைப் பெற்றுத் தருமாறு சமநல சேவைத் திணைக்களத்திடம் விவசாயிகள் கோரியுள்ளனர். (50-207)




# வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூலை 21

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச மலர் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளைக் கரவெட்டிப் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

இந்த மலருக்கு படைப்பாளிகளினதும் புத்திஜீவிகளினதும் தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவை படைப்பியல், ஆய்வியல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருப்பதுடன் இதுவரை வெளிவராத ஆக்கமாகவும் இருக்கவேண்டும் எனவும் ஆக்கங்களின் தன்மை மலர் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

படைப்பாளிகள் தமது படைப்புக்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரவெட்டி என்னும் முகவரிக்கு அல்லது dskaraveddi@sltnet.lk என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலரும் மலர்க் குழுவின் தலைவருமாகிய சி.சத்தியசீலன் கேட்டுள்ளார்.

மேலதிக விவரங்களுக்கு 021 226 3258 என்ற தொலைபேசி இலக்கத்துடன் உதவிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீயுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## சகல சாயி நிலையங்களிலும் இன்று அமைதிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஜூலை21

சாந்தி, சமாதானம் நிலவவேண்டி குடாநாட்டில் உள்ள சகல சாயி நிலையங்களிலும் இன்று பிற்பகல் 3.30 மணியில் இருந்து 5 மணிவரை அமைதிப் பிராத்தனை இடம்பெறவுள்ளது.

திருநெல்வேலி பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தின் அழைப்பின் பேரில் இடம்பெறும் இந்நிகழ்வில் சகலரையும் கலந்துகொண்டு பிரார்த்தனையில் ஈடுபடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

# ஏ.ஜே. கனகரத்தினாவின் நூல்கள் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு கையளிப்பு


யாழ்ப்பாணம், ஜூலை21

மறைந்த இலக்கிய விமர்சகரும் பத்திரிகையாளருமாகிய ஏ.ஜே.கனகரத்தினாவின் சேகரிப்பில் இருந்த பல்துறை சார்ந்த ஆயிரத்து 500 நூல்கள் யாழ்.பல்கலைக்கழக நூலகத்திற்குக் கையளிக்கப்பட்டன.

இந்தக் கையளிப்பு வைபவம் நேற்றுக் காலையில் பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

ஏ.ஜே.கனகரத்தினாவின் நெருங்கிய நண்பரும் யாழ்.பல்கலைக்கழக பரீட்சை அனுமதிகள் கிளையின் உதவிப் பதிவாளருமாகிய இ.கிருஷ்ணகுமார் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேலிடம் நூல்களைக் கையளித்தார்.

பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் நூலகர் மற்றும் விரிவுரையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (50-111)



ஏ.ஜே.கனகரத்தினாவின் நூல்களை யாழ்.பல்கலைக்கழக நூலகத்துக்கு கையளிக்கும் வைபவம் நேற்று நடைபெற்றது. இதில் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஏ.ஜேயின் உருவப்படத்துக்கு குத்துவிளக்கேற்றுவதையும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் உரையாற்றுவதையும், ஏ.ஜேயின் நெருங்கிய நண்பரும் உதவிப் பதிவாளருமாகிய இ.கிருஷ்ணகுமார் நூல்களைப் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேலிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# மாணவ தாதிக் கற்கை நெறிக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

மாணவ தாதிக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டு இதுவரை தோற்றாத 53 பேரையும் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

வி. தனுசி - சுன்னாகம், ஜி. கார்த்திகா - சுழிபுரம், எஸ். நிலானி - பாண்டியன்குளம், ஆர். குகதர்ஜினி - கொடிகாமம், என்.கீதாரூபி - உடுப்பிட்டி, கே. கீமினா - கைதடி, ஆர். தட்சாயனி - சுழிபுரம், எஸ். சுரேகா - மானிப்பாய், ஏ. பிரேமராணி - வட்டுக்கோட்டை.

வி. கஜாயனி - சுன்னாகம், ஏ. துசாந்தி - சுன்னாகம், பி. யசோதினி - கந்தர்மடம், கே. பகீரதி - சுன்னாகம், எஸ். சிந்துஜா - கொழும்புத்துறை, சி. தர்சனா - கொக்குவில், பி. நிறன்ஜனா - சுழிபுரம், எஸ்.றஜிதா - யாழ்ப்பாணம், ரி. மயூறிகா - மானிப்பாய், ரி. கௌசல்யா - மானிப்பாய்

கே. சிந்துஜா - சுன்னாகம், எம்.தனுஜா - கோப்பாய், எஸ். மயூறி - கொட்டடி, ரி. சுலோஜினி - கொக்குவில், எஸ். சர்மிளா - சாவகச்சேரி, சி. கங்காஜினி - சுழிபுரம், எம். மயூரி - பருத்தித்துறை, ரி. அஸ்வினி - அச்சுவேலி, எஸ். துளசிகா -அராலி தெற்கு,

வி. தவராசா - காரைநகர், பி. டயூரன் - கைதடி, எஸ். ஜசீகரன் - வட்டுக்கோட்டை, கே.பத்மரூபன் - மீசாலை வடக்கு, ஏ. சுபாகரன்- துன்னாலை, கே. லவன் - நல்லூர், ரி. செந்தூர்குமரன் - சாவகச்சேரி, எஸ். வித்தகன் - வட்டு. கிழக்கு, எஸ். வசந்தகுமார் - மாதகல் மத்தி, ரி. கங்காதரன் - மாதகல், எஸ்.ஜோன் போல் - லக்கலை யாழ்ப்பாணம், எஸ்.தெட்சனன் - பருத்தித்துறை, வி.துவாரகன் - துன்னாலை வடக்கு,

ஏ. பத்மவேல் - தும்பளை, பி. பிரதீபன்- உடுவில் வடக்கு, எஸ். முருகானந்தன் - கொட்டாவத்தை, எஸ். பாஸ்கரலிங்கம் - கோப்பாய், எஸ். நிசாந்தன் - மட்டுவில் தெற்கு, எஸ்.ஜனகன் - பஸ்செல்ஸ் [illegible] யன் - வட்டு. தெற்கு, ஆர். ராஜ்குமார் - ஆஸ்பத்திரி வீதி, ரி. பானுமகேந்திரா - மணல்தறை லேன், கே. விமலராஜ் - கைதடி,

ஏ.அருள்ஜீவரட்ணம் - மானிப்பாய், எல். தபோதன் சீனியர் லேன், பி. உபேந்திரன் - நவாலி கிழக்கு, கே. அனுசன் - கொக்குவில் கிழக்கு, சீ.கனிஸ்ரன் - ராஜேந்திரா றோட், யாழ்ப்பாணம், ஜெயச்சந்திரன் - வரணி, பி. சுராஜ் - அளவெட்டி, வி. திவாரகன் - சங்கரத்தை, என். துளசிதன் - புலோலி மேற்கு, எஸ்.ஞானசுந்தரம் - கொடிகாமம்,

பி. சயந்தன் -நீர்வேலி, ரி. தர்சன் - ஸ்ரான்லி றோட், எம். நிசாந்தரியதாஸ் - மவுண்காமல் றோட், எம். ஆதவன் - காளிகோவில் வீதி, பி. திலீபன் - 4ஆம் குறுக்குத் தெரு, எஸ். துளசிகா - அராலி தெற்கு, கே. திலீபன் - பன்னாலை, கே.ரஜீவன் - வட்டுக்கோட்டை, எஸ். செல்வவரதன் - திருநெல்வேலி, பி. பிரதீபன் - ஏழாலை,

பி.சஞ்சீவன் - அச்சுவேலி தெற்கு, ஏ. சிவநாதன் - காரை நகர், எஸ். முகுந்தன் - முருகமூர்த்திலேன், எஸ். ஸ்ரீஜெயகணேசா - காரை [illegible] - தாவடி வடக்கு, எஸ். ஜோதெப்வாதன் - இளவாலை, வி. பகீரதன் - கைதடி, என். நந்தசன் - வரணி, ரி. ராகுலன் - சுன்னாகம்.

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை21

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் பவள விழாவை ஒட்டி இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சி.மகேஸ்வரதாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினமும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மு.புஸ்பரத்தினமும் கலந்துகொள்வர்.

அறிமுகஉரை, வெளியீட்டுரை, ஆய்வுரைகள் என்பன இடம்பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் ஆறு முன்பள்ளிகளுக்கிடையிலான மெய்வன்மைப்போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு மன்றத்தின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி, ஜூபிற்றர் முன்பள்ளி, தொட்டிலடி கண்ணன் ஸ்ரீ பாரதி முன்பள்ளி, ராஜாஜி முன்பள்ளி, ஞானரைவர் முன்பள்ளி, நாகலிங்க சுவாமி முன்பள்ளி ஆகியவற்றின் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவர். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ்.மத்தியஸ்தர் சபையின் முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டிய மத்தியஸ்தர் தின விழா நாளை காலை 9.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன், யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

திருநெல்வேலி மாரியம்மன் வீதி, சிவசக்தி பாலர் பாடசாலையின் 7ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை காலை 9 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.தெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் வா.ஜெயரட்ணம் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் ச.ஏகம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக இளைப்பாறிய கிராமசேவையாளர் த.தங்கராசா, கிராமசேவையாளர் எஸ். வசந்தகுமார், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை அதிபர் மு.விக்கினேஸ்வரன், உரும்பிராய் பிரதேசசபை பொறுப்பதிகாரி திருமதி ஜானகி கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றம் நடத்தும் இளையதம்பி இராசையா முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு ம.கனகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் அலுவலர் திருமதி விமலாதேவி ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் 14 ஆவது பதவியேற்பு வைபவம் இன்றுகாலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

றோட்டரக்ட் எஸ்.உமாகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக றோட்டேரியன் அ.பஞ்சலிங்கமும் சிறப்புவிருந்தினராக தொழில் அதிபர் க.ஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்துகொள்வர். (1-86)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை21

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கான சட்டவிதிகள் சம்பந்தமான பயிற்சி வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அராலி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

25 வருடங்கள் எமது பாடசாலையில் ஆசிரியராகவும், உப அதிபராகவும் சிறந்து சேவையாற்றி (20-07-2007) அன்று ஓய்வுபெற்ற



**சு.நடராசா**



அவர்கள் தனது ஓய்வு காலத்தில் மகிழ்ச்சியாக வாழ இன்று (21-07-2007) அவரது 60 ஆவது பிறந்ததினத்தில் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.
பழைய மாணவர்கள்.

(62752)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர்.

(62126)

## காணி விற்பனைக்கு

மயிலணி, சுன்னாகம், முருகமூர்த்தி கோயில் வடக்கு வீதிக்கு அருகில் பிரதான ஒழுங்கையில் பயன் தரு மரங்களுடனும் தனிக் கிணறும் உள்ள 2½ பரப்பு சதுரக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
திருமதி கி.புவனராணி,
புகையிரத வீதி,
மல்லாகம்.

(சி/52985)

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்
## COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sirambiyadi Lane
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

### Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

### Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

### Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

### Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 23/07/2007- 09.00

# இறைச்சிக் கோழி (உயிர்) விற்பனைக்குண்டு

உயிர் இறைச்சிக் கோழிகள் (Broiler) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**சிறி விநாயகர் ஸ்ரோர்ஸ்**
ஆனைக்கோட்டைச் சந்தி
தொ.பே: 077 6138978

**வீனஸ் பாம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**அராலி கோழிப் பண்ணை**
அராலி மத்தி,
அராலி.

**வீனஸ் விற்பனை நிலையம்**
அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி
தொ.பே: 0776941693

**ஆதவன் விற்பனை நிலையம்**
328, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 8418

**நொதேன் விற்பனை நிலையம்**
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.

குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

(62607)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## சன்னாசி ரவிச்சந்திரன் (ரவி)

தோற்றம்
09-11-1969

மறைவு
01-08-2006

இல்லத்தின் வேராக நின்று எமக்காக
- உழைத்தவரே
ஆலம் விழுது போல உறவுகள் ஆயிரம்
- இருப்பினும்
'அப்பா' என்றழைக்க உறவில்லாமல்
எம்மை பரிதவிக்க விட்டதேனோ
எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில்
- வீற்றிருக்கும்
ஆறாது எம்துயர் அழியாது உங்கள் நினைவுகள்.

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்
ராதா (மனைவி),
கஜானன் (மகன்).

15/8, தேவாலய வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(சி/52983)

# வெளிநாடுகளிலிருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தைப் பெற்று மாபெரும் பரிசுகளை வெல்லுங்கள்



## வெஸ்டர்ன் யூனியன் யாழ்குடா முகவர்கள்

| முகவர் | விலாசம் | நகரம் | தொ.பே. |
|---|---|---|---|
| 1. மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் | 212, ஸ்ரான்லி வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 2024 |
| 2. ராஜன் வி.சி.டி. | கடற்கரை வீதி, குருநகர். | யாழ்ப்பாணம் | 021 222 6854 |
| 3. ராஜூ ஸ்ரோர்ஸ் | 67,69, கஸ்தூரியார் வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 5224 |
| 4. ஸ்ரீ முருகன்ஸ் | சிவன் கோயில் வீதி, காரைநகர். | யாழ்ப்பாணம் | 021 222 2670 |
| 5.திருமுருகன் கொம் நெட் | 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | யாழ்ப்பாணம் | 021 222 7310 |
| 6.யோகா கொமினிகேஷன் | 315, பலாலி வீதி, திருநெல்வேலி. | யாழ்ப்பாணம் | 021 222 2106 |
| 7.குமார் முகவர் தபால் நிலையம் | 133/3, மின்சார நிலைய வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 3453 |
| 8.ஸ்ரீமுருகன் முகவர் தபால் நிலையம் | 303, கே.கே.எஸ் வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 5392 |
| 9.கணேஷா | 329 பி,பிரதான வீதி. | பருத்தித்துறை | 021 226 3928 |
| 10.V.M.K. ஜூவலர்ஸ் | 15, கண்டி வீதி. | சாவகச்சேரி | 071 232 4412 |
| 11.ஸ்ரீகிருஸ்ணா கொம்யுனிகேஷன் | தொல்புரம். | சுழிபுரம் | 021 222 6268 |
| 12.நீதினி முகவர் தபால் நிலையம் | பஸ்நிலையம். | சுன்னாகம் | 021 222 6267 |
| 13.கணேசன் செண்டர் | கே.கே.எஸ். வீதி. | இணுவில் | 021 222 5708 |
| 14.வசந்தா முகவர் தபால்நிலையம் | கண்டி வீதி. | கைதடி | 021 222 3850 |
| 15.அஸ்வினி மல்ரி பிளாசா | பலாலி வீதி. | கோண்டாவில் | 021 222 5115 |
| 16.தினேஷ் பேக்கவுஸ் | யாழ் .வீதி. | மானிப்பாய் | 021 222 2570 |
| 17.சரண்யா கொம்யுனிகேஷன் | சங்கானை சந்தை. | சங்கானை | 021 459 1220 |
| 18.ஓம் சரவணபவ கொம்யுனிகேஷன் | பொலிகண்டி. | வல்வெட்டித்துறை | 060 221 2616 |
| 19.நியூ அம்பிகா கொம்யுனிகேஷன் | பிரதான வீதி. | நெல்லியடி | 021 226 4197 |
| 20.சந்தியா மல்ரி கோட்யாட் | 531, பருத்தித்துறை வீதி. | நல்லூர் | 021 222 6960 |

பிரதான முகவர்
MMBL MONEY TRANSFER

WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

(சி/52903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் குறித்து ஆராய 2 கோடி ரூபா செலவில் மாநாடு!

## வெளியுறவு அமைச்சு நடத்துகிறது

கொழும்பு, ஜூலை 21

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகளுக்கு எதிராக தோன்றியுள்ள பயங்கரவாதச் சவால்கள் பற்றி ஆராய்வதற்காக கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

வெளியுறவு அமைச்சின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டுக்காக சுமார் 2 கோடி ரூபா செலவிடப்படவிருக்கின்றது.

செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளர்கள் கலந்து கொள்ளவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

முன்னாள் இந்திய இராணுவ தளபதி வி.வி. மாலிக், தாய்லாந்தின் முன்னாள் வெளிநாட்டமைச்சர், ஆசியான் செயலாளர் நாயகம் சூரின் பிட்சுவான் மற்றும் இலங்கையரான பயங்கரவாதம் தொடர்பான நிபுணர் டாக்டர் ரோஹான் குணரத்ன ஆகியோர் மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (அ-ப)

# 'யுனிசெவ்' பிரதிநிதிகள் சுமத்தும் குற்றச்சாட்டு; அதன் தலைவரிடம் விடுதலைப் புலிகள் ஆட்சேபம்

கிளிநொச்சி,ஜூலை 21

யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதிகள் தமது அமைப்பின் மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் குறித்து விடுதலைப் புலிகள் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த யுனிசெவ் அமைப்பின் தலைவர் ஜோ அன்ன வன்கெர்பனிடம் இந்த ஆட்சேபத்தை விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடந்த இப் பேச்சில் பங்குபற்றிய விடுதலைப் புலிகளின் சிறார் பாதுகாப்புச் சபையின் பிரதிநிதிகள் இந்த விடயத்தை அவரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

'யுனிசெவ்' அமைப்பின் நியூசிலாந்து பிரதிநிதி, கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி 'டொமினியன் போஸ்ட்' என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் பாரபட்சமான வகையில் கருத்து தெரிவித்திருந்ததையும் - நியூயோர்க்கில் 'யுனிசெவ்' அமைப்பின் தூதர் கடந்த மாதம் 5ஆம் திகதி விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சுமத்தி கருத்துத் தெரிவித்திருந்ததையும் -

'யுனிசெவ்' அமைப்பின் தலைவரிடம் எடுத்துக் கூறி தமது ஆட்சேபத்தை விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (1)

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டையையே சமர்ப்பிக்கவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூலை21

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க தேசிய அடையாள அட்டையையே சமர்ப்பிக்கவேண்டும் என்று கல்வித்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

எக்காரணம் கொண்டும் தபால் அடையாள அட்டை ஏற்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தவிர்க்கமுடியாத சூழலில் ஓரிருவருக்கு அவரது படத்தின்ன உறுதி செய்து பரீட்சை எழுத அனுமதிக்கும் அதிகாரம் கல்விப் பணிப்பாளர்களுக்கு பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ளது என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் பரீட்சைகளில் தேசிய அடையாள அட்டை யே ஏற்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் சகல கல்வி அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (1)

# தூதரகத்தில் பதிவுகளை மேற்கொள்ள அமெரிக்க பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு,ஜூலை 21

இலங்கையில் தற்பொழுது தங்கியுள்ள அமெரிக்கப் பிரஜைகள் அனைவரையும் தூதரகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கேட்டுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் போர் சூழ்நிலைகளை யொட்டி இந்த் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ப)

# கொழும்பில் 'கிழக்கின் உதயம்' கிழக்கிலோ மக்கள் அஸ்தமனம்

## எரிச்சலைக் கொட்டுகிறார் அரியநேத்திரன் எம்.பி.

'கிழக்கின் உதயம்' என்ற பெயரில் சுதந்திர சதுக்கத்தில் விழா எடுக்கும் அரசு, அதன் மூலம் வடக்கு, கிழக்கைத்தனி ஒரு நாடாக உத்தியோக பூர்வமாக அங்கீகரித்துள்ளது. இதுதான் யதார்த்தம்" - என்கிறார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரன்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் திருத்தச் சட்ட வரைபு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அரியநேத்திரன் இப்ப டிக் கூறினார்.

கொழும்பில் ' கிழக்கின் உதயம்' என அரசு கொண்டாட்டம் நடத்துகின்றது. ஆனால், கிழக்கு மக்களோ ஆயுத முனையில் அஸ்தமனத்தை நோக்கித் தள்ளப்பட்டுள்ளனர்.

1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் கிடைத்தபோது சுதந்திர சதுக்கம் என்ற புனிதப் பிரதேசம் உருவாக்கப்பட்டு, சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

ஆனால், இன்று கிழக்கைப் பிடித்துவிட்டோம் என்று கூறிக்கொண்டு அந்தப் புனிதப் பிரதேசத்தையே அசிங்கப்படுத்திவிட்டது அரசு.

இப்பொழுது மட்டக்களப்பில் தேர்தல் நடத்தப் போவதாக கூறுகின்றனர். அதேவேளை, அங்கு அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவற்றை உதாசீனப் படுத்திவிட்டே அங்கு தேர்தல் நடத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒருவருடத்துக்கு மேலாக அங்குபோக முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு இராணுவமும் கருணா அணியினரும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன.

தமிழ்ப் பிரதிநிதிகள் தமது தொகுதிக்கு சுதந்திரமாக செல்வதற்குப் பாதுகாப்பு வழங்க முடியாத அரசு, அங்கு தேர்தல் நடத்தப் போவதாக கூறுவதுதான் வேதனை.

மட்டக்களப்பு மாநகரசபை, மண்முனை மேற்கு பிரதேசசபை மற்றும் நிர்வாகக் கட்டடங்கள் அனைத்திலும் இராணுவம் குடிகொண்டுள்ளது. வைத்தியசாலைகள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கோயில்கள், பாடசாலைகள் எல்லாம் இராணுவ முகாம்களாகவே இருக்கின்றன. ஆனால் இப்பொழுது இராணுவம் கைப்பற்றிவிட்டதாக விழா எடுக்கின்றனர். இது எவ்வளவு காலம் நிலைக்கும் என்பது தெரியாது.

நாங்கள் தேர்தல்களுக்குப் பயந்தவர்கள் அல்லர். அங்கே ஜனநாயகத்தை நிலைப்படுத்தி, சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்த முன்வருவீர்களேயானால் அங்கு வாழும் தமிழ் மக்கள் அனைவரும் புலிகளுக்கே வாக்களிப்பார்கள்.

ஆனால், அதை ஒருபோதும் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

- என்றார் அரியநேத்திரன். (சி)

# கலகலப்பான முறையில் ஆரம்பமாகி கைகலப்பில் முடிவடையும் தாச்சி

தமிழ் மக்களுடைய பாரம்பரிய விளையாட்டாக தாச்சி அல்லது கிளித்தட்டு என்ற விளையாட்டு உள்ளது. இந்த விளையாட்டை யாழ்.குடாநாட்டில் ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் முன்னெடுக்கவெனப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அத்தகைய ஒரு இலக்கை அடைவதில் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டியே உள்ளது.

இன்று உலகில் நடைபெறும் போட்டிகள் அனைத்திலும் கூடியளவு நடுவர்களைக் கொண்ட போட்டியாக தாச்சியே காணப்படுகின்றது. விளையாட்டு வீரர்கள் 12 பேராக இருக்கின்ற போதிலும் (இரு அணிகளிலும் தலா ஆறு பேர் வீதம்) நடுவர்கள் விளையாட்டு வீரர்களிலும் பார்க்கக் கூடுதலாகவே காணப்படுவார்கள்.

பிரதம நடுவர்கள் இரண்டு பேர், கோட்டு நடுவர்கள் 12 பேர், நேரக் கணிப்பாளர் என மொத்தம் 15 பேர் கடமையாற்றும் ஒரு போட்டியாகும். ஆனாலும் இந்தப் போட்டிகள் ஆரம்பமாகும் போது மிகவும் கலகலப்பாக இருக்கும் அதேபோல் போட்டியில் குழப்பம் ஏற்படும் போது அந்தக் கலகலப்பு கைகலப்பாக மாறி இரு தரப்பினரும் அடிதடியில் இறங்கும் சம்பவங்கள் தான் இப்போது அதிகம்.

கடந்த பதினைந்து வருடங்களாக இந்தப் போட்டிகளை சீரமைப்பதற்கென யாழ்.மாவட்டத் தாச்சி சங்கம் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. இது 91ஆம் ஆண்டு காலப் பகுதியில் உருவாக்கப்பட்டு தொடர்ந்து இயங்கிவருகின்றது.

ஆனாலும், அந்தச் சங்கம் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு நியாயமான பங்களிப்பை செய்துள்ள போதிலும் விளையாட்டு வீரர்களின் மனத்தில் மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கவில்லையென்றே கூறலாம்.

போட்டிகள் நடைபெற்று இறுதிப் போட்டி பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் அமைப்பாளர்களினால் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் போட்டியைத் திட்டமிட்ட முறையில் அல்லது தோல்வியை ஏற்க முடியாத நிலையில் குழப்பும் சம்பவங்கள் இப்போது அதிகரித்து வருகின்றன. இத்தகைய நிலைமை தொடர்வதற்குக் காரணம் சங்கம் சில இடங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கையை உரிய முறையில் எடுக்காமை அல்லது அதற்குப் பின் நிற்கின்றமையே.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இணுவிலில் உள்ள மைதானம் ஒன்றில் சமுர்த்தி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட தாச்சிப் போட்டியொன்று நடத்தப்பட்டது. இறுதிப் போட்டியில் தாவடி அணியும் இணுவில் அணியும் மோதிக்கொண்டன.

இந்தப் போட்டியில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அடிதடி ஏற்பட முன்னர் ஓர் அணி விலகிச் செல்ல முற்பட்டது. இந்த நேரத்தில் ஒரு குழுவினர் பொல்லுகள், இரும்புக் கம்பிகள் கொண்டு விலகிச் செல்ல முற்பட்ட அணியைத் தாக்கியுள்ளனர். மிகவும் வேதனையான விடயம் என்னவெனில் குறிப்பிட்ட அணியின் முக்கிய வீரர் ஒருவரை எதிர் காலத்தில் விளையாடாது முடக்கும் முகமாக அவரின் கை முறிக்கப்பட்டதுடன் ஏனைய வீரர்களும் மற்றைய அணியின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுபவர்களினால் விரட்டி விரட்டி தாக்கப்பட்டுள்ளார்கள்.

## குழப்பம் விளைவிப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட அணியின் ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் திரும்பிச் சென்று முன்னர் தாக்கிய அணியின் பகுதியில் உள்ள வீடுகளை அடித்துடைத்தும் வேலிகளை வெட்டியும் பெரும் பதற்றமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர்.

அப் பகுதி கிராம அலுவலர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அமைதியான நிலைமை நான்கு நாள்களுக்குப் பின்னர் ஏற்பட்டது. இவ்வாறான ஒரு மிலேச்சத்தனமாக நிலை இந்தத் தாச்சி விளையாட்டில் தலை தூக்கியிருப்பது மிகவும் வேதனைப்பட வேண்டிய விடயமாகும்.

ஆட்டமிழந்தார், ஆட்டமிழக்கவில்லையென்பதை பெரும் பான்மையான சமயங்களில் விளையாட்டு வீரர்கள் தீர்மானிக்கும் நிலைமையே தற்போது காணப்படுகின்றது. மத்தியஸ்தர்கள் அடி, அடியில்லை [illegible] தீர்மானிக்க [illegible] முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

தாச்சி சங்கம் மத்தியஸ்தர்களை உருவாக்கி சீருடை அணிவித்து பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளதைப் போன்று மத்தியஸ்தர்களின் தீர்ப்பையும் தெரிவிக்கும் தீர்மானத்தைத் தற்துணிவின் அடிப்படையில் மேற்கொள்வதன் மூலமே சில பிரச்சினைகளுக்கு தீர்வையெட்ட முடியும். விளையாட்டு வீரர்களை பக்குவப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் முடியும்.

குழப்பத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் சங்கத்தில் கிடைக்கக்கூடிய பதவி நிலைகளைக் கருத்திற்கொண்டு எடுக்காது விடுவதென்பது விளையாட்டை வளர்ப்பதாக அமையாது. அழிப்பதாகவே அமையும் என்பதை தாச்சிச் சங்கமும், மத்தியஸ்தர்களுகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.


கடந்த காலத்தில் கழகங்களிடையேயான போட்டிகள் வடக்கு- கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகள் ஆகியவற்றின் மூலம் தாச்சிச் சங்கம் தனது இலக்கை எட்டி வருகின்றமை பாராட்டத்தக்கதொன்றாகும்.

இதே போன்று யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் மட்டத்திலும் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் உரிய விதி

## குடாநாட்டு விளையாட்டரங்குகளில்

களை கடைப்பிடித்து இப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படுவதில்லையென்பதும் சுட்டிக்காட்டப் பட வேண்டியதே.

தாச்சி விளையாட்டு வீரர்களில் பெரும்பாலானவர்கள் அதனை பொழுது போக்காக விளையாட [illegible] போதிய விளையாட்டு [illegible]றாமையுமே மைதானத்தில் பிரச்



சினைகள் ஏற்படக் காரணமாகும். இதற்கு ஒரு சிறந்த உதாரணம் கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

மயிலிட்டி விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டியில் விளையாடிக் கொண்டிருந்தது. போட்டி முடிவடைய சில செக்கன்களே இருந்தன. இந்த நேரத்தில் மயிலிட்டி கழகத்தைச் சேர்ந்த ரஞ்சன் என்பவர் பழம் எடுக்க முயற்சித்து அடிபட்டதோ, படவில்லையோ என அனைவரும் திகைத்து நின்றார்கள்.

## வின்னைன்

இந்த நேரத்தில் அடிபட்டதாக அவர் தனது கையை உயர்த்திக் காட்டி அணியின் தோல்வியையும் ஏற்றுக் கொண்டார். இதனால் சக அணி வீரர்கள் அவருடன் பலத்த சர்ச்சையில் ஈடுபட்டனர்.


உண்மையில் அந்த விளையாட்டு வீரர் உண்மையைக் கூறாது மறுத்து இருக்கலாம். அத்தகைய ஒரு பிழையான முறையற்ற செயற்பாட்டுக்கு உட்படாது வெற்றியும், தோல்வியும் வீரனுக்கு அழகு என்பதை ஏற்றுக்கொண்டதன் மூலம் தாச்சி விளையாட்டுப் போட்டியின் முன்னுதாரணமாக அவரின் நடவடிக்கை இன்றும் பலரிடமும் பேசப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய முன்னோடி செயற்பாட்டை தாச்சி விளையாட்டில் ஈடுபடும் அனைத்து வீரர்களும் பின்பற்றுவார்களானால் இந்த விளையாட்டு மேலும் வளர்ச்சி அடைந்து சிறந்த விளையாட்டாகத் திகழும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருவே துணை

## முத்துக்குமாரு மயில்வாகன சுவாமிகளின்
## 22ஆவது ஆண்டு குருபூசைத்தினம்



காலம்:
நாளை (22.07.2007)
ஞாயிற்றுக்கிழமை

இடம்:-
சந்நிதியான் ஆச்சிரமம்

வழமைபோல் ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும். விசேட பூசை, அபிஷேக ஆராதனைகளுடன் குருபூசை நிகழ்வு இடம்பெறும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.
**சந்நிதியான் ஆச்சிரமம்.**
(சி/52979)

## Jaffna College Institute of Technology Vaddukoddai

**Radio, TV and Electronics Servicing Practice**

காலம்: 6 மாதங்கள் (முழு நேரம்)

முழு அளவிலான செயல்முறைப் பயிற்சி நெறி

கல்வித்தகைமை: G.C.E O/L வரை படித்த மாணவர்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விசேட பயிற்சிநெறி: UPS, Computer Power Supply, Monitor, CD Player, DVD பழுதுபார்த்தல்

**Apply before : 30 July 2007**

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
Director,
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.
T.Phone: 0602213139/
021 2228275 (C/52975)
Email: jdt@sltnet.lk

யாழ்.குடாவில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்

## PMC பெருமையுடன் வழங்கும்.....

ஆங்கிலத்தில் பேசவேண்டுமென்ற உங்கள் கனவை நனவாக்க
ஒகஸ்ட் - 05 இல்

## Master of English - V.C.D System

வீட்டில் இருந்தவாறே இலகுவாக ஆங்கிலம் பேசுவதற்கான பயிற்சிகள் சிறுவர் முதல் பெரியவர் வரை ஆவலுடன் காணத்துடிக்கும் காட்சிகளுடன் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் தமிழ்மொழி மூலம் பார்ப்பவர் மனதை கொள்ளையிடும் ஒரு சின்னத் திரைப்படைப்பு.

ஆங்கிலம் கற்க நேரமில்லையென ஏங்கும் தொழில் புரிபவர்கள், மாணவர்கள், இல்லத்தரசிகள், வகுப்பறையில் சேர்ந்து கல்வி கற்கக் கூச்ச சுபாபமுடையவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வெளிநாடு செல்ல ஆங்கிலம் கற்கவேண்டியவர்கள் அனைவருக்கும் ஏற்றவகையில் இசையுடன் கூடிய நாடக அமைப்பிலான படப்பிடிப்பு.

ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் நிகழ்ச்சிகளின் சம்பாசனைகள், நகைச்சுவைகள் போன்ற சுவாரசியமான காட்சிகள். Sports, Post Office, Magic Show, Classroom, Exam Hall, Club, Market, Airport, Bank, Hospital போன்ற இடங்களில் தேவையான உரையாடல்கள்.

" பிரதியாக்கம் செய்ய முடியாதது"

**விண்ணப்ப முடிவு திகதி - 25.07.2007** (62756)

"முற்பதிவு செய்தவர்களுக்கே பிரதிகள் வழங்கப்படும்"

முற்பதிவு செய்ய விரும்புவோர்:-

**PMC, 443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு நேரில் வரவும் அல்லது உங்கள் பெயர் முகவரியை **0779623307, 0779877361** என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு S.M.S பண்ணுங்கள் அல்லது தொடர்புகொள்ளுங்கள். எங்கள் வெளிக்கள உத்தியோகத்தர்கள் உங்களைச் சந்திப்பார்கள்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமை புரியும்
**தர்மலிங்கம் கோகுலானந்தன்**
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கந்தையா தர்மலிங்கம்**
கோப்பாய் வடக்கு, கோப்பாய்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய்.
பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும் (சி/52987)

## விற்பனைக்கு

நிலப்பரப்பு 1 குளி 12.3 விஸ்தீரணம் கொண்ட காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு சுண்டிக்குளி (ஈச்சமோட்டையில்) விற்பனைக்குண்டு.

தொடர்பு:S.S.**நாதன்**
16/3, ஈச்சமோட்டை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0776146434 (62784)

## விற்பனைக்கு

உயிருடன் புறொயிலர், கல்பேட்ஸ், உயிர்ச்சேவல் என்பன மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
**தாசன் பாம்,**
158/4, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்
(ICRC சந்திக்கும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் இடையில்). (சி/52991)

## காணி விற்பனைக்கு

யாழ்.ஸ்ரான்லி வீதியில் வின்சர் திரையரங்குக்கு அண்மையில் இரண்டு பரப்பு ஆறு குளி கொண்ட வெறும் காணி உடன் விற்னைக்குண்டு.

தொடர்பு:
**செ.சுப்பிரமணியம்**
167/10, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 3826
(62807)

## இறைச்சிக்கோழி

உயிர்க்கோழி, புறொயிலர், கல்பேட், விறாத்துச் சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்).
1. NEW R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. சோபிதா எலெக்ரோனிக்ஸ், K.K.S. றோட், சுன்னாகம்.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து நந்தாவில் அம்மன் வீதி ஆரம்பத்தில் 4 பரப்புக் காணியுடன் வீடு மற்றும் தனிக்கிணறு, வளவு வருமானத்துடன் விற்பனைக்குண்டு.

*27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(சி/52990)

## பௌதிகவியல், இணைந்த கணிதம்
## A/L 2008, 2009

பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களைக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் மேற்படி பாடங்கள் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் (Individual, Class) கற்பிக்கப்படும். முழுப் பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். 20 வருட வினாத்தாள்கள் செய்து முடிக்கப்படும். M.C.Q.இற்கான விளக்க விடைகளும் கொடுக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன. பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. **T.P. 077 - 6648751**

ஆசிரியர் R.**பாலசுப்பிரமணியம்** B.Sc.(Cey), Dip. in. Ed.
*42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்*
(கடையிற் சுவாமியார் வீதிக்கு முன் உள்ள ஒழுங்கை) (62766)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை அல்பிரேட்

*(ஓய்வுபெற்றச் சுங்க இலாகா ஊழியர்)*



கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அல்பிரேட் 20.07.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - மரியா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற மருசலீன் - றோசலின் தம்பதியரின் மருமகனும் நீற்மலர்(புஸ்பம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற எட்வேட் திரேசம்மா மற்றும் இராஜநாயகம் (பிரான்ஸ்), நவம், லில்லி, பாலசிங்கம் (பிரான்ஸ்), பெனடிற் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் கலிஸ்ரன் (பிரான்ஸ்), பேனாட் (றோயல் பான்சி கவுஸ்), வசந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் உஷாந்தினி, ரெறன்ஸ் சந்திரகுமார் (கொழும்பு வீரகேசரி ஊழியர்) ஆகியோரின் மாமனும் மொறீனா, மெரீனா ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.07.2007) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

334, ஆஸ்பத்திரி வீதி,
[illegible]
(62811)
தகவல்:
[illegible]

## சேவை நலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு சா. தியாகலிங்கம் (அதிபர்)



யா/நாரந்தனை கணேச வித்தியாலயத்தில் பல ஆண்டுகளாக ஆசிரியராகவும் பின் அதிபராகவும் சேவை புரிந்து மாற்றலாகி யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றும் திரு சா.தியாகலிங்கம் அவர்கள் பாடசாலை வளர்ச்சிக்காக சுமார் 28 ஆண்டுகளாகச் சேவை புரிந்ததை இட்டு நாம் அனைவரும் அவரைப் பாடசாலை மண்டபத்தில் 21.07.2007 நடைபெறும் பிரிந்துபசார வைபவத்தில் பாராட்டுவதோடு அவர் கல்விச் சமூகத்திற்கு பல ஆண்டுகள் சேவையாற்ற நாரந் தனைத் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேவை விவரம்
யா/நாரந்தனை கணேச வித்தியாசாலை
01.01.1979 - 28.10.1988 உதவி ஆசிரியர்
29.10.1988 - 31.10.1989 பிரதி அதிபர்
01.11.1989 - 26.06.2007 அதிபர்

நாரந்தனை,
ஊர்காவற்றுறை. (62802)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.**

## தவறிவிட்டது

முள்ளானை, இளவாலையைச் சேர்ந்த கதிரவேலு சச்சிதானந்தம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் (இல.018533) என்பன முள்ளானைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நா.சிவராசா, அலுக்கை, அளவெட்டி கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். அல்லது 0779079940 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (சி/52992)

## 2ஆம் வருட நினைவலைகள்

மலர்வு
20
✱
02
✱
1937



உதிர்வு
12
✱
08
✱
2005

### திருமதி இராசரத்தினம் நேசம்மா

திதி: ஆடி பூர்வபக்க ஸப்தமி

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாதம்மா எங்கள் துயரம்
பாரினில் நாம் உள்ளவரை உங்கள்
நினைவு நிலைத்திருக்கும்.

*மாறாத நினைவுகளுடன்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் (நேசம் அழகு நகை).

*பொற்தொழிலாளர் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (62768)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரன் ஜெகதீஸ்வரி

(ஜெயந்தா)



கைதடி வடக்கைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரன் ஜெகதீஸ்வரி அவர்கள் கடந்த 17.07.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரனின் (அரச மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு - கோப்பாய் வைத்தியசாலை) அன்பு மனைவியும் சாருகா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி- கணிதப் பிரிவு 2009), துஜீபன் (கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தி., தரம் - 9) ஆகியோரின் அன்புத் தாயும் செல்வராஜா- சிவமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாதர் - இரத்தினம் தம்பதியர் மற்றும் சிவபாலசிங்கம் (டென்மார்க்), காலஞ்சென்ற தவபாலசிங்கம் ஆகியோரின் மருமகளும் கேதீஸ்வரி (கனடா), கிருபாகரன் (ஜேர்மனி), சுபதீஸ்வரி (கனடா), வரதீஸ்வரி (உதவி சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பசுபதி சரஸ்வதி, கிருஷ்ணன் சின்னம்மா, பாலசுப்பிரமணியம் சரஸ்வதி, இரத்தினம் இந்திரா, சின்னராஜா இலட்சுமி தம்பதியரின் பெறாமகளும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவசுப்பிரமணியம், பவானந்தன் ஆகியோரின் மைத்துனியும் கந்தரின் பாசமிகு பேத்தியும் ஜெஸ்விகா, தரண்யா, சினேகா, சுபவீன், அபிநயா ஆகியோரின் சிறிய தாயும் சேயோனின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(22.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி வடக்கு,*
*கைதடி.* (சி/52994)
*தகவல்:*
**மா.மகேஸ்வரன்** *(கணவர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அம்பலமாகிறது அணுகுமுறை

தொப்பிகலவைக் கைப்பற்றி, கிழக்கை முழுதாக மீட்டுவிட்டோம் என்ற வீரச் செருக்கோடு நேற்று முன்தினம் நாட்டு மக்களின் முன் மார்தட்டிப் பேசினார் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தமது அரசு என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதைத் துலாம்பரமாக அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அவரது வார்த்தைகளுக்கு இடையில் - வாசகங்களுக்கு மத்தியில் - பொதிந்து கிடக்கும் அர்த்தங்களைப் புரிந்து கொண்டால் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான அவரது கருத்தியல் நிலைப்பாட்டையும் சிந்தனைப் போக்கையும் துல்லியமாக உணர்ந்து - அறிந்து - கொள்ள முடியும்.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணுங்கள் என்று வாய் சலிக்காது, வலியுறுத்தி வரும் அமெரிக்காவிலிருந்து அடுத்த நாடான இந்தியாவரை முழு சர்வதேச சமூகமுமே, ஜனாதிபதி மஹிந்தரின் நிலைப்பாட்டை அவரது இந்த உரையினூடாகப் புரிந்துகொள்ள முயன்றால், இப்பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர் தரப்புக்கு நியாயம் கிடைக்க அதுவே வழி சமைத்ததாகி விடும்.

தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு அடிப்படையாக - ஆதாரமாக - இருப்பதே சர்வதேச சமூகத்தின் பங்களிப்போடு உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் தான்.

அந்த ஒப்பந்தம் குறித்து அதிபர் மஹிந்தர் என்ன கூறுகின்றார்? அது அநியாயமான நடவடிக்கை என்கிறார் அவர்.

இலங்கைத் தீவில் இலங்கை அரசினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் கட்டுப்பாட்டில் தனித்தனியாக இரு வெவ்வேறு நிர்வாகப் பிரதேசங்கள் இருக்கின்றன என்ற யதார்த்தத்தின் மீதுதான் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தமே கட்டி எழுப்பப்பட்டிருக்கின்றது.

அந்த அடிப்படையையே தகர்க்கும் விதத்தில் - அதன் மூலம் முழு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையே சிதைத்து விடும் பாங்கில் - முழங்குகின்றார் மஹிந்தர்.

*''பயங்கரவாதத்திற்கு சட்டரீதியான அதிகாரப் பிரதேசமொன்று இருக்கின்றது என்பதை உடன்படிக்கை ஒன்றின் மூலம் ஏற்றுக்கொண்டதுபோன்ற அநியாயமான செயலொன்று இலங்கை யிலன்றி உலகில் வேறெங்குமே நடக்கவில்லை.''* - என்கிறார் அவர்.

அதாவது புலிகளின் கட்டுப்பாட்டில் ஒரு பிரதேசம் உள்ளது என்ற யதார்த்தத்தை உடன்படிக்கை மூலம் ஒப்புக்கொண்டமை அநியாயம் என்கிறார் அவர்.

அந்த உடன்படிக்கை வாசகத்தை - அதன் அடிப்படையை - தாம் ஏற்றுக்கொள்ள மாட்டார், ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதை தமது நடவடிக்கை மூலமே தாம் செயலில் உறுதிப்படுத்திக் காட்டியிருக்கின்றார் என்பதையும் அடுத்த வசனத்திலேயே அவர் வெளிப்படுத்துகிறார்.

*''இந்தப் பிரதேச அதிகார மாயையை அம்பலப்படுத்தியதன் மூலம் பயங்கரவாதத்தின் ஈழக் கனவு சுக்குநூறாகச் செல்லும் செய்தியையே தொப்பிகல மலை உச்சியில் இருந்துகொண்டு எமது வீரம்மிக்க படை வீரர்கள் உலகுக்கு எடுத்துக் கூறினார்கள்.''* - என்று அடுத்துக் குறிப்பிடுவதன் மூலம் அவர் என்ன சொல்ல வருகின்றார்?

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்று வரையறை செய்யப்பட்ட விடயத்தை நானும், எனது அரசும், எனது படைகளும் ஏற்கவேயில்லை. புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த தொப்பிகலவைக் கைப்பற்றி, அங்கிருந்து புலிகளை விரட்டியடித்து, முழு கிழக்கு மாகாணத்தையும் எனது அரசுப் படைகளைக் கொண்டு மீட்டதன் மூலம், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் புலிகளின் பிரதேசம் என்று குறிப்பிடப்படும் அம்சத்தை நாம் ஏற்கவேயில்லை என்பதை செயலில் உலகுக்கு வெளிப்படுத்தி அம்பலப்படுத்தியிருக்கின்றோம் என்பதே அவர் இவ்வாறு குறிப்பிட முனையும் ஒரே செய்தியாகும்.

ஆக, யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு அடிப்படையாக அமையும் அம்சத்தை தாமும் தமது அரசும், தமது படைகளும் ஏற்கவில்லை, ஏற்கப் போவதில்லை என்பதை உலகை நேரடியாகப் பார்த்து - நெற்றிக்கு நேராக - சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்தர்.

இதற்குப் பின்னரும் அமைதி வழியில் - பேச்சு மூலம் - சமரச மார்க்கத்தில் - சமாதான முறைகளில் - இலங்கை அரசுடன் பேசி இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணுங்கள் என்று தமிழர் தரப்பைப் பார்த்து எந்த முகத்துடன் கோரப் போகின்றது சர்வதேச சமூகம்?

இனப்பிரச்சினைக்கு யுத்த வழித் தீர்வு என்பதில் தீவிரத்தோடு இருக்கும் ஜனாதிபதி மஹிந்தர் அதற்காக போர் வெறி முனைப்புடன் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்.

இதைப் புரிந்தும் புரியாதது போல் நடந்துகொள்ளும் சர்வதேசத்தின் அசிரத்தையான போக்கு, இப்பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர் தரப்பை விசனத்துக்குள்ளும் எரிச்சலுக்குள்ளும், அதிருப்திக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

சர்வதேசமே! இலங்கை விவகாரத்தில் உண்மையை - சத்தியத்தை - நீதியை - நியாயத்தை - கண்டுகொள்ள நீ விழித்துக் கொள்ளப் போவது எப்போது?

# நல்லைக் கந்தன் ஆலயப் பெருந்திருவிழா ஏற்பாடுகளை வழமைபோல் மேற்கொள்ள நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 21

அடுத்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது வழமை போன்று வீதித்தடை, தொண்டர் சேவை ஆகியவற்றை மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலய உற்சவ ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக யாழ். மாநகரசபையில் விசேட கூட்டம் நேற்று நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

✱ வழமை போன்று பருத்தித்துறை வீதி அரசடி வீதிச் சந்திப்பு, செட்டித் தெரு நல்லூர் குறுக்குத் தெரு, பருத்தித்துறை வீதி, பிராமண கட்டுக்குளம் வீதி, கோவில் வீதி, சங்கிலியன் வீதி ஆகியவற்றில் வீதித் தடை அமைக்கப்படும். காலை 5 மணிக்கு வீதித்தடை அமுல் படுத்தப்படும்.

✱ வியாபாரிகள் தமது கடைக்குரிய பொருள்களை நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையில் கொண்டு செல்ல அனுமதிப்பது.

✱ துவிச்சக்கரவண்டிகளை ஆலயச் சுற்றாடலில் கொண்டு செல்வது முற்றாகத் தடை செய்யப்படும்.

✱ தொண்டர்களின் துவிச்சக்கரவண்டிகளை இந்து விடுதியில் நிறுத்த ஏற்பாடு செய்யப்படும். சுற்றாடலில் வசிப்பவர்கள் தமது வாகனங்களை தடை செய்த வீதிகளால் செலுத்திச் செல்ல அனுமதி வழங்கப்படும்.

✱ குடி தண்ணீர் வசதிகள் மாநகர சபை செய்து கொடுக்கும். இதற்கென தெரிவு செய்யப்பட்ட பத்து இடங்களில் குடிதண்ணீர் தொட்டிகள் அமைக்கப்படும்.

✱ நல்லை ஆதீனம், கந்தசுவாமி கோயில் ஆலயக் கிணறுகளை மாநகரசபை இறைத்துச் சுத்தம் செய்யும்.

✱ விசேட தினங்களில் பஸ் வண்டிகள் எங்கே தரித்துச் செல்ல அனுமதிப்பது என்பது தொடர்பாக பின்னர் ஆராயப்படும்.

✱ மின் விநியோகம் வழமை போன்று இருக்கும்.

✱ தொண்டர் சேவைகள், வர்த்தக நிலையங்கள் அமைத்தல் போன்றவை வழமைபோல் இடம்பெறும்.

✱ வீதித் தடைகளில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் இருப்பது தொடர்பாக பிரதான பொலிஸ் பரிசோதகர், உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் ஆகியோருடன் தொடர்புகொண்டு முடிவெடுக்கப்படும். (அ-1-111)

# தேங்காய் எண்ணெய் என நினைத்துக் கொண்டு விளக்குக்குப் பெற்றோல் ஊற்றிய பூசகர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

எரிந்துகொண்டிருந்த விளக்கில் தேங்காய் எண்ணெய் என நினைத்து பெற்றோலை ஊற்றிய ஆலயப் பூசகர் தீக்காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

புங்குடுதீவு சிவன்கோயிலில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

எரிகாயங்களுக்குள்ளான புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆலயப் பூசகரான சிவசுப்பிரமணியம் தினேஸ் சர்மா (வயது 27) யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமாலை அவர் உயிரிழந்தார்.

ஆலயத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்குத் தணியும் தறுவாயில் இருப்பதைக் கண்டு தேங்காய் எண்ணெய் என நினைத்து பெற்றோலை ஊற்றியபோதே, தீப்பிடித்து விபத்து ஏற்பட்டதாகத் தெரியவந்தது. (அ-1-78)

# தன்னைக் கொத்திய பாம்புடன் ஆஸ்பத்திரிக்கு வந்தார் இளைஞர்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

தன்னைக் கொத்திய நாகபாம்பை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, காயத்துக்குச் சிகிச்சை பெறுவதற்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்த இளைஞர் ஒருவர் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

நேற்று முற்பகல் சுமார் 9.30 மணியளவில் வைத்தியசாலையின் நோயாளரை அனுமதிக்கும் பிரிவுக்கு அவர் வந்ததும், அங்கு கூடி நின்ற நோயாளர்களில் பலரும் திகிலுற்று அங்கும் இங்கும் கலைந்தனர்.

அராலி வீதி, பொம்மைவெளியைச் சேர்ந்தவர் 27 வயதான சின்னராசா சதீஸ்வரன். நேற்றுக் காலை அவர் தனது வீட்டுக் கோழிக் கூட்டுக்குள் முட்டை எடுப்பதற்காக இடது கையைவிட்டார். அப்போது பாம்பு கடிப்பதாக உணர்ந்து - அறிந்து- அடுத்த கையால் பாம்பின் தலைப்பகுதியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்.

அந்தப் பாம்பை வலது கையில் பிடித்தவாறே அவர் வைத்தியசாலைக்கு வந்தார். இன்னொருவர் அவரை மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்தார்.

பாம்பினால் கடியுண்ட அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

தமது வீட்டிலிருந்து ஆஸ்பத்திரி வரை சதீஸ்வரன் கையில் கொண்டு வந்த பாம்பு சுமார் இரண்டரை அடி நீளமானது.

தம்மைக் கொத்திய பாம்பு நச்சுப்பாம்பா? என்பதனை அறிந்து கொள்ளும் பொருட்டே நீண்ட நேரமாக அதன் தலைப்பகுதியை கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு வந்ததாக அவர் சொன்னார்.

அவரைக் கொத்தியது நாகப்பாம்பே எனப் பலராலும் இனங்காணப்பட்டது. உறவினர்கள் அந்தப் பாம்பை யாழ். முனியப்பர் கோவில் பகுதியில் விட்டனர் என அறியவந்தது. (அ-78)

# அத்தியடியில் நேற்று மாலை வர்த்தகர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ். நகருக்கு சமீபமாக, அத்தியடிப் பகுதியில் நேற்றுமாலை 4.25 மணியளவில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ். நகரில் அமைந்துள்ள ''அல்டி'' மின்சார உபகரண விற்பனை நிலையத்தின் உரிமையாளரான செல்லத்துரை சண்முகதாசன் (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ். பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு யாழ். வைத்தியசாலையில் விசாரணைகளை நடத்தினார்.

இறந்தவர் தனது கடையைப் பூட்டிவிட்டு, 'ஸ்கூட்டரில்' வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது - அத்தியடி வீதியில் அவர் சென்றுகொண்டிருந்த வேளை - மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-111)

# கொக்குவிலில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 21

கொக்குவில், ஸ்ரேசன் வீதியில் அம்பட்டன் பாலத்துக்கு சமீபமாக நேற்று நண்பகல் 12.35 மணிக்கு கூலித்தொழிலாளியான இளைஞன் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கோப்பாய் மத்தி, கோப்பாயைச் சேர்ந்த குணசிங்கம் ரகுபாலன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

யாழ். பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு மரண விசாரணைகளை நடத்தினார்.

கொலையுண்டவர் வழமைபோல், நேற்றுக்காலை 8.30 மணிக்கு வேலைக்குப் புறப்பட்டார் என்றும் -

பின்னர் அவர் சுடப்பட்டார் எனத் தகவல் கிடைத்து, சடலத்தை பார்வையிட்டதாகவும் - அவரது உறவினர் சாட்சியம் அளித்தனர். பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவருக்கு இல. வங்கி புலமைப்பரிசில்

கடந்த வருடம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு புமைப்பரிசில் வழங்கும் திட்டம் ஒன்றை இலங்கை வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 88 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இலங்கை வங்கியின் 18+ சேமிப்புக் கணக்கில் 2006 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதி வரை ரூபா ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் நிலுவை வைத்திருப்பின் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஓகஸ்ட் 31ஆம் திகதி என்று இலங்கை வங்கியின் வட பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

தகுதியானவர்கள் தங்கள் கணக்கு வைத்திருக்கும் கிளையுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# சுன்னாகம் பகுதியில் நேற்றுத் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

சுன்னாகம் பகுதி நேற்றுக்காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

காலை முதல் இடம்பெற்ற இந்தத் தேடுதலில் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அவற்றைச் சோதனையிட்டனர்.

காங்கேசன்துறை வீதிக்கு கிழக்குப் பக்கமாக மல்லாகம் நீதிவான் முகாம் அமைந்துள்ள ஒழுங்கை முதல் ஜெட் மோட்டோர்ஸ் ஒழுங்கைக்கு இடைப்பட்ட பகுதிகள் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன.

சுற்றி வளைக்கப்பட்ட பகுதியில் இருந்து பாடசாலை மாணவர்கள், தொழில்கள் நிமித்தம் செல்பவர்கள் காலையில் வெளிச்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். (அ-1-68)

# வீடமைத்து முடிந்தும் கொடுப்பனவு இல்லை!

யாழ்ப்பாணம், ஜூலை 21

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வீடமைப்புத் திட்டங்களில்வீட்டுவேலைகளைப் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு வேலைகள் பூர்த்தியடைந்து ஒரு வருடத்திற்கு மேலாக கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையெனவும் -

இக்கொடுப்பனவை நம்பி கடன் வாங்கி வேலைகளைப் பூர்த்தி செய்ததாகவும் இக்கொடுப்பனவு தாமதத்தினால் பெருமளவு வட்டிப் பணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# வலி. மேற்கில் நிலக்கடலை செய்கை

வலி.-தென்மேற்கு, ஜூலை 21

கியூடெக் - ஹரித்தாஸ் நிறுவனம் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் கீரிமலை விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஐம்பது பயனாளிகளுக்கு தலா 5 கிலோ நிலக்கடலையை வழங்கியுள்ளது. அத்துடன் தலா 2 கிலோ யூரியா, 8 கிலோ பி1 உரங்களையும் வழங்கியுள்ளது. மண்வெட்டி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் மாகியப்பிட்டியிலுள்ள கீரிமலை விவசாய போதனாசிரியரினால் அவரது பணிமனையில் வைத்து மேற்படி 50 பயனாளிகளுக்கும் நிலக்கடலை செய்கை, அதன் பராமரிப்பு, பசளை இடுதல் ஆகியன தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. (1-135)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 6 | ஞாயிற்றுக்கிழமை 22.07.2007 |
| திதி : அட்டமி | பின்னிரவு 01.08 |
| நட்சத்திரம் : சித்திரை பி.ப.: 03.46 | |
| சுபநேரம் | : 09.01 - 10.31 |
| ராகுகாலம் | : 04.31 - 06.01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து ஜனநாயக நிர்வாக முறையை ஏற்படுத்துங்கள்

## நாடாளுமன்றில் விமல் வீரவன்ஸ வற்புறுத்தல்



''பிரிவினைவாதபயங்கரவாதிகளான புலிகளின் பிடியில் இருந்து விடுதலை செய்த கிழக்கு மாகாண மக்களை மீண்டும் ஒரு பயங்கரவாத ஆயுதக் குழுவின் பிடிக்குள் தள்ளிவிடக்கூடாது. அங்கே உண்மையான ஜனநாயக நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.''

- இவ்வாறு ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையின்போது கிழக்கில் சாதனை படைத்த இராணுவத்தினருக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

ஐ. தே. கட்சி புலிகளுடன் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின்பின் திருமலைத் துறைமுகப் பகுதி முதல் சம்பூர் வரை புலிகள் தமது முகாம்களை அமைத்து தமது அதிகாரத்தை விஸ்தீரப்படுத்தி இருந்தனர்.

ஆனால் நமது படையினர் இன்று பல்வேறு விதமான தடைகள் - அழுத்தங்களுக்கு மத்தியில் உயிர்த் தியாகங்களின் மூலம் கிழக்கு மாகாணத்தை முற்றாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விட்டனர். இது தனிப்பட்ட ஒரு கட்சிக்கு கிடைத்த வெற்றி அல்ல. இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைத்த வெற்றி.

நமது படையினர் இராணுவரீதியாக கிழக்கு மாகாணத்தை பிரிவினைவாதிகளின் பிடியில் இருந்து பிரித்து எடுத்து விட்டனர். அதேபோன்று நாம் அரசியல் ரீதியாக உயர் நீதிமன்றத்தின் உதவியுடன் சட்ட ரீதியாக கிழக்கு மாகாணத்தைப் பிரித்து எடுப்போம். இந்நிலையில், புலிகளின் பிடியில் சிக்கித் தவித்த மக்களுக்கு விமோசனம் ஏற்படுத்த வேண்டும். அரசு தாமே வெற்றி கண்டதாக கூச்சல் போட்டு ஆரவாரம் செய்கிறது. வெறுமனே சத்தம் போடுவதால் பயன் ஏற்படாது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் பிரிவினைவாதப் புலிகளின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து விடுவித்த கிழக்குவாழ் மக்களை மற்றும் ஒரு ஆயுதக்குழுவின் பிடிக்குள் தள்ளிவிடக்கூடாது.

அங்கே இயங்கிவரும் தனித்தனி ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அங்கே ஜனநாயக முறையிலான நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அப்பொழுதுதான் நாம் பெற்ற வெற்றியைப் பாதுகாக்க முடியும்.

அரசிடம் உறுதியான கொள்கை தற்போது இல்லை. ஜெனிவாவில் ஒரு காலையும், கிளிநொச்சியில் ஒரு காலையும் வைத்துக்கொண்டுள்ளது. இரண்டு தோணியில் கால்வைத்துப் பிரயாணம் செய்து வெற்றிபெற முடியாது.

ஜெனிவாப் பக்கம் உள்ள காலைப் பிடுங்கி, கிளிநொச்சியில் இரண்டு கால்களையும் ஊன்ற வைக்கவேண்டும். இதனை செய்விக்கக்கூடிய வல்லமை உள்ள எதிர்க்கட்சியும் இங்கு இல்லை. அதுவும் இரட்டைத் தன்மை உடையதாகவே இருக்கின்றது.

எனவே, உறுதியான ஒரு எதிர்க்கட்சி அவசியம். நாட்டு மக்களின் உதவியுடன் கிழக்கில் பெற்ற வெற்றியைப் போன்று வடக்கில் இருந்து புலிகளை விரட்டி அடிப்போம். - என்றார். (சி)

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்தத்துடன் தொடர்புபட்ட நபர்களின் பெயர்களும் தொலைபேசி இலக்கங்களும் ஏன் நீக்கப்பட்டிருக்கின்றன என்று ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர், சில காரணங்களுக்காக இந்த ஒப்பந்தப் பத்திரத்தில் இருந்த அமெரிக்கத் தொலைபேசி இலக்கங்களும், மின் அஞ்சல் முகவரிகளும், சில அமெரிக்க நபர்களின் பெயர்களும் நீக்கப்பட்டுவிட்டன என்றும் ஒப்பந்தம் தொடர்பான ஏனைய விவரங்கள் அதில் அடங்கியுள்ளன என்றும் கூறினார். (சி)

## தள்ளாடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த தாய் சகஜம்மா அனிஸ்டன் ( வயது - 30) என்றும், கைப்பகுதியில் காயமடைந்த குழந்தை துஸ்மிந்தன் அனிஸ்டன் (வயது -1 ) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்றுப் படையினர் மேற்கொண்ட ஆட்லறி ஷெல்கள் மன்னார் - ஆலங்குளம் மற்றும் வடக்கண்டல் போன்ற பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்துள்ளன என்றும் கூறப்பட்டது. (சி)

## தெற்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களையும் சேர்ந்த மக்கள் இம்மாதம் ஒன்பதாம் திகதியும், நேற்று அதிகாலை போன்றே பூமியதிர்வுகளைத் தாம் உணர்ந்ததாகத் தெரிவித்தனர். ஆனால் அன்றையதினம் பூமியதிர்வு எதனையும் பல்லேகலையில் உள்ள பூகம்பமானிகள் காட்டவில்லை என்று புவியியல் பணியகம் தெரிவித்திருந்தது.

கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை காலை கிழக்குக் கரை யிலிருந்து 400 கிலோமீற்றர் தொலைவில் பூமியதிர்வு ஏற் பட்டதாகவும் அதன் ரிச்டர் அளவு 5.2 எனவும் கணக்கிடப்பட்டிருந்தது. (அ)

## இன்ஸ்பெக்டர், சார்ஜண்டுக்கு தலா ஏழு வருடங்கள் கடூழியம்!

கொழும்பு, ஜூலை 21

கைக்கடிகாரக் களவு ஒன்று தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட யுவதி ஒருவரை மனிதாபிமானமற்ற முறையில் - கொடூரமான - முறையில் சித்திரவதை செய்தார்கள் என்று கூறப்படும் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கும், பொலிஸ் சார்ஜண்ட் ஒருவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் தலா ஏழு வருடம் கடூழியச் சிறைத்தண்டனையும் பத்தாயிரம் ரூபா அபராதமும் விதித்தது.

அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் மேலும் ஒரு வருடம் கடூழியம் அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேவர்த்தனா இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கினார்.

## அரசு எங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்போம். இது குறித்து எந்தத்தயக்கமும் காட்டமாட்டோம். நாட்டில் அண்மையில் நடைபெற்றுவரும் கடத்தல்களுக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. கடத்தலில் ஈடுபட்ட பலர் இப்போது கொழும்பில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். மர்மமாக இருந்த விடயம் இன்று உலகுக்குத் தெரியவந்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் 'தொப்பிகல' மீதான வெற்றி ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். விடுதலைப் புலிகளை இப்போது அந்தப் பகுதி வாழ் மக்கள் புறந்தள்ளி வைத்துள்ளனர்.

முன்னர் பல தடவைகள் இந்தியா மற்றும் இலங்கை இராணுவங்களால் தொப்பிகலப் பகுதி கைப்பற்றப்பட்டது. அப்போதைய சூழ்நிலையில் நான் அங்கம் வகித்த விடுதலைப் புலிகள் அமைப்பு மக்களின் ஆதரவை இழந்திருக்கவில்லை - என்றார்.

## உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர், மன்னார் மாவட்ட அரச அதிபர் நிக்கலஸ் பிள்ளைக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர்.

இந்த வீதி மூடப்பட்டதால், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் பிரதேசத்திற்கான பொருள் விநியோகம் நேற்று தடைப்பட்டிருந்தது. இதேவேளை, இப்பாதை மீண்டும் எப்போது திறக்கப்படும் என்பது அறிவிக்கப்படவில்லை. (சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்ட மற்றும்பலர்வெளிமாவட்டங்களுக்கு அனேகமாகக் கொழும்புக்குத் தலைமறைவாகிவிட்டனர் என்றும் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நபர்களிடம் இருந்து ஒரு தோகை நகைகளும், கறுப்புத் துணிகளும் போலித்துப்பாகிகளும் மீட்கப்பட்டுள்ளன.

பிரதஸ்தாப நபர்கள் நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி. ச. இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

குடாநாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள கொள்ளையர்களுடன் தொடர்புகளை வைத்திருந்து, அவர்கள் மூலம் கிடைக்கும் தகவல்களை வைத்துக்கொண்டு தாம் கொள்ளையில் ஈடுபட்டு வந்தனர் என்று விசாரணையில் தெரிய வந்ததாகவும் பொலிஸார் நீதிவானிடம் பிரஸ்தாபித்தனர்.

சம்பந்தப்பட்ட நான்கு இளைஞர்களையும் அடையாள அணிவகுப்புக்குட்படுத்த வேண்டும் என்று பொலிஸார் நீதிவானிடம் கேட்டுக்கொண்டனர்.

அணிவகுப்புக்கு உத்தரவிட்ட நீதிவான், நால்வரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-]

## புலிகளுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மேளனம் தொடர்பாகத் தாம் அனுப்பி வைத்த ஆசிச் செய்தியிலேயே ஜனாதிபதி இப்படிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜனாதிபதி அந்தச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

எமது வீரதீரமிக்க பாதுகாப்புப் படையினரால் மிலேச்சத்தனமான பயங்கரவாதிகளிடமிருந்து கிழக்கு விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் இந்த மாநாட்டுக்கு வந்துள்ள மதிப்பு மிக்க பிரஜைகளை நான் வாழ்த்துகிறேன்.

மூன்று தசாப்தங்களின் பின்னர் இந்த மதிப்புமிக்க பூமியிலிருந்து பயங்கரவாத அரசியலையும் வன்முறையையும் ஒழிப்பதில் ஒரு தீர்க்கமான நடவடிக்கையை இன்று நாம் எடுத்துள்ளோம்.

பயங்கரவாதத்திற்கு சட்டரீதியான பிரதேசமொன்றைத் தாரைவார்த்து உடன்படிக்கையொன்றை ஏற்றுக்கொண்டதன் ஊடாக குற்றமொன்றைச் செய்துகொண்ட ஒரே நாடு இலங்கையைத் தவிர வேறெங்கும் இருக்க முடியாது.

தமிழீழம் என்ற அரசு குறித்து உலகளாவிய பிரசாரத்தை நடத்துவதற்கு முடியுமாக இருந்த எல். ரீ. ரீ. ஈ., அதன் சொந்தப் பிரதேசம் என்ற மாயையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இன்று இந்த மாயையை எமது கட்சியினால் வழிநடத்திச் செல்லப்படும் அரசினூடாக நாம் அம்பலப்படுத்தியுள்ளோம்.

இந்த வெற்றியோடு இணைந்ததாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே காணப்பட்ட வரலாற்று ரீதியான சகோதரத்துவ உறவுகளை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கின்றது. இது இனவாதம் என்ற நச்சு விதைகளினால் தூவப்பட்டு அழிக்கப்பட்டதாகும். இந்த வரலாற்று முக்கியத்துவம்மிக்க சந்தர்ப்பத்தில் உங்களது கவனத்தை எமது கட்சியின் அடிப்படைக் கடப்பாடான அந்தச் சகோதரத்துவ உறவை மீளக் கட்டியெழுப்புதல் என்ற விடயத்தின்பால் திசை திருப்ப விரும்புகின்றேன்.

நீங்கள் மாகாணங்களுக்கும் மாவட்டங்களுக்கும் கிராமங்களுக்கும் செல்லவேண்டுமென நான் கேட்டுக் கொள்கின்றேன். கிழக்கில் நாம் அடைந்த வெற்றிப் பெருமிதத்துடன் புதிய இலங்கையை நோக்கிய-எமது பயணத்தை நாம் முன்னெடுப்போம். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய நாம் அனைவரும் சகோதரர்களாக எவ்வித அச்சமும் சந்தேகமும் இன்றி வாழக்கூடிய சூழலொன்றை உருவாக்குவோம். - என்றார்.

## மன்னாரில் படைமுகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் நான்கு போராளிகள் உயிரிழந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நடுத்தரஇயந்திரத்துப்பாக்கி (எம்.எம்.ஜி.) - 1, இலகுரக இயந்திரத் துப்பாக்கி (எல். எம்.ஜி.) -1, 60 எம்.எம். மோட்டார் - 1, தானியங்கித் துப்பாக்கிகள் -4, கைக்குண்டுகள் - 25 மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பன புலிகளால் மினி முகாமிலிருந்து அள்ளப்பட்டன என்றும் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

''ஊடறுத்துத் தொல்லைப்படுத்தும் வேவு அணிகள் மையம் கொண்டு செயற்படுகின்ற எதிரிகளின் இந்த முகாமை அழித்தன் மூலம், அந்த முகாமினால் விடுக்கப்பட்டு வந்த அச்சுறுத்தலைப் புலிகள் முறியடித்துள்ளனர்'' - என்றும் அவர் கூறினார்.

ஆனால் -

இந்தச் சமரில் அரச படையினர் மூவர் மட்டுமே உயிரிழந்தனர் என்றும் புலிகள் தரப்பில் ஒன்பது பேர் பலியாகினர் என் றும் இராணுவம் தெரிவித்திருக்கின்றது.

''மன்னாரில் அதிகாலையில் மோதல் நிகழ்ந்தது. புலிகள் மோட்டார் மற்றும் பீரங்கி கொண்டு தாக்கினர். நாங்கள் மூன்று சிப்பாய்களை இழந்தோம். நால்வர் காயமடைந் தனர்'' என்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க.

''புலிகள் தரப்பில் 9 பேர் உயிரிழந்தமையை எமது துருப்புகள் அவதானித்துள்ளன. புலிகள் தரப்பில் மேலும் 24 பேர் காயமடைந்தனர் என வட்டாரங்கள் தெரிவித்தன'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.

போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவுக்கு நீலச்சேனை மோதல் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று அதன் பேச்சாளர்களின் ஒருவரான ஸ்ரெயினர் ஸீவன்சன் தெரிவித்தார்.

கிழக்கை மீட்டுவிட்டதாக அரசாங்கம் 'கிழக்கு உதயம்' வெற்றி விழா கொண்டாடிய 24 மணித்தியாலயங்கள் முடிவதற்குள் தாக்குதல் நடந்திருக்கிறது -

வடக்கைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் விடுதலைப்புலிகள், படையினரின் கிழக்கு தாக்குதல்களுக்கு பழிக்குப் பழி தீர்ப்பதாகசபதம் எடுத்துள்ளனர் - என்று சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று நேற்றைய தாக்குதல் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கிறது. (அ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி தர்சனா நாகராஜா (ஜனா)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்சனா நாகராஜா (ஜனா) நேற்று (20.07.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தங்கவேல் நாகராஜாவின் (ராஜன்) அன்பு மனைவியும் சண்முகநாதன்-திலகவதி தம்பதியரின் அன்பு மகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
துரைச்சாமி அம்புலும்
(பேர்த்தி)

37/51. முதலாம் ஒழுங்கை.
பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.


**கந்தர்சன் வெளியீடு**

2007 ஓகஸ்ட் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 1 தொடக்கம் 5 வரை அனைத்துப் புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**A/L 2007 கருத்தரங்கு**

இந்து நாகரிகம்
K. கந்தசத்தியதாசன்
N.T. தரன்
22.07.2007 (ஞாயிறு) காலை 8.30-1.30 மணி

பொருளியல்
E. ஞானேஸ்
மாலை 2-4 மணி

*அச்சடித்த பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
*தொடர்ந்து ஏனைய பாடங்களும் நடைபெறும்.

ஐடியல் ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.

**வணிகக் கல்வி இறுதிக் கருத்தரங்கு - 2007**

விடயம் - பகுதி II

(கொழும்பு, கண்டி மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் கருத்தரங்க விடயங்கள் அடங்கியது)

காலம்: 23.07.2007 திங்கள் காலை 8.30 மணி

இடம்: BEACON (யாழ்நகர்.)

By: S. யசோ

Note: வெளி மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.

**O/L தரம் 9 மாணவர்களுக்கு விசேட கணித வகுப்பு**

T.R.SAN

இடம்:
உரும்பிராய் இந்துக் கல்லூரி முன்பாக (நந்தா இல்லம்)
நேரம்: திங்கள், வியாழன், வெள்ளி, சனி (மாலை 5-6)
0774176366, 0779352391


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவன[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org